செ.கு.எண்: 96 நாள்: 16/04/2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.4.2013

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் அருகே 5.4.2013 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கல்குளம் வட்டம், அருவிக்கரை கிராமம், மாத்தூர் திட்டங்கணவிளை பகுதியைச் சேர்ந்த திரு. விஸ்வநாதன் என்பவரின் மகன் ஜெஸ்டின் ராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், மாத்தூர் கிராமம் அருகே நின்று கொண்டிருந்த திரு. ரவி என்பவர் மீது 10.4.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மல்லிகாபுரம் கிராமம், உத்திரமேரூர் - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் 12.4.2013 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த உத்தரமேரூர் வட்டம்; முருக்கேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. எல்லப்பன். என்பவரின் மகன் நேதாஜி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, பாரிமுனை, பூக்கடை பேருந்து நிலையம் அருகே 12.4.2013 அன்று கட்டுப்பாட்டை இழந்த அரசுப் பேருந்து சாலையில் நின்று கொண்டிருந்த பள்ளிக்கரணை, நன்மங்கலம் பகுதியைச் சேர்ந்த திரு. மங்கிலால் என்பவரின் மகன் சிறுவன் பரத் மீது மோதியதில், அவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த ஜெஸ்டின் ராஜ், ரவி, நேதாஜி மற்றும் சிறுவன் பரத் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மல்லிகாபுரம் கிராமம், உத்திரமேரூர் - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் 12.4.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் முருக்கேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாஸ்கர், சென்னை, பாரிமுனை, பூக்கடை பேருந்து நிலையம் அருகே 13.4.2013 ஏற்பட்ட சாலை விபத்தில் திரு. மங்கிலால், திரு. தியாகராஜன் மற்றும் திரு. முருகேசன் ஆகிய மூவர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த ஜெஸ்டின் ராஜ், ரவி, நேதாஜி மற்றும் சிறுவன் பரத் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9